பெருமாள்பட்டு

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் 33-வது கல்லூரி தின விழா

திருவள்ளூர், மார்ச் 15– திருவள்ளூர் மாவட்டம் பெருமாள்பட்டில் அமைந்துள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் 33 –வது கல்லூரி தின விழா இறைவணக்கம், குத்துவிளக்கு ஏற்றுதல் மற்றும் மாணவியரின் வரவேற்பு நடனத்துடன் தொடங்கியது.

கல்லூரி முதல்வர் முனைவர் பி.ஆர்.ரமேஷ்பாபு வரவேற்புரை வழங்கி ஆண்டறிக்கையை சமர்ப்பித்து, கல்லூரியின் கல்வி, ஆய்வு, வேலை வாய்ப்பு மற்றும் மாணவர்களின் சாதனைகள் குறித்து விளக்கினார். ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை தலைவர் முனைவர் ஆர்.நாராயணசாமி தலைமை உரையாற்றினார்.

தமிழ்நாடு தொடக்க நிதி வளம் மற்றும் புதுமை இயக்கம் இணை இயக்குனர் முனைவர் இயான்சுரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு புதுமை சிந்தனை மற்றும் தொழில் முனைவுத் திறன் குறித்து ஊக்கமளித்தார். விழாவில் கல்வி, அறிவியல் கண்காட்சி, கலாச்சாரம் மற்றும் விளையாட்டு துறைகளில் சிறந்து விளங்கிய மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை இயந்திர பொறியியல் துறை தலைவர் முனைவர் ஜீ.கணேஷ் ஒருங்கிணைத்தார்.

பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றிய ஆதி.மு.க. சார்பில் மறைந்த முன்னாள் முதல்– அமைச்சர் ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு ஒங்கால பள்ளி, கேசவ ராஜகுப்பம், கொள்ளாள குப்பம், பாண்டரவேடு, பகுதிகளில் உள்ள பொதுமக்கள் 2000–க்கும் மேற்பட்டோருக்கு டி.வை மற்றும் மாங்கல்யம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் டி.டி.சீனிவாசன் தலைமையில் ஒங்காள்பள்ளி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரபாபு ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழக அமைப்பு செயலாளரும் முன்னாள் எம்.பி, டாக்டர் திருத்தணி கோ.அரி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பொதட்டூர்பேட்டை பேரூராட்சி கழக செயலாளர் ஏ.ஜி.ரவிச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் சாந்தி பிரியா கலேஷ், மாவட்ட பிரதிநிதி சரவணன், ஆதி.மு.க. நிர்வாகிகள் ஜான், ராஜேஷ், விஜயகுமார், பாஸ்கரன், சிவகுமார், அமராவதி, கஜேந்திரன், லட்சுமணன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆலங்குடி அருகே இன்று அதிகாலை பயங்கரம்

மகளை கடத்த முயன்றபோது தடுத்த தாய் வெட்டிக் கொலை

திருமணத்திற்கு பெண் கேட்ட வாலிபர் வெறிச்செயல்

ஆலங்குடி, மார்ச்.15– புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள நெடுவாசல் பகுதியை சேர்ந்தவர் கரேஷ். விவசாயியான இவர், விவசாய கூலிவேலைக்கும் சென்று வந்தார். இவருக்கு திருமணமாகி காளியம்மாள் என்ற மனைவி இருந்தார். இந்த தம்பதிக்கு சுவேதா (வயது 20), சுபதர்ஷினி (18) ஆகிய இரண்டு மகள்களும், பால முருகன் (12) என்ற மகனும் உள்ளனர்.

கொலையுண்ட காளியம்மாள்

2–வது திருமணம்

இதற்கிடையே சொந்த ஊரில் விவசாயம் குறைந்ததால் செங்கல்பட்டுக்கு கரேஷ் கூலி வேலைக்கு சென்றார். அங்கு விஜயலட்சுமி என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டு அவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். நெடுவாசல் பகுதியிலேயே வெவ்வேறு வீடுகளில் கரேஷ் காளியம்மாள், விஜயலட்சுமி ஆகியோருடன் குடும்பம் நடத்தி வந்தார்.

இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கரேஷின் இரண்டாவது மனைவியான விஜயலட்சுமியின் தம்பி செங்கல்பட்டை சேர்ந்த விஜின் (34) என்பவர் கரேஷின் முதல் மனைவியான காளியம்மாளின் மகள் சுபதர்ஷினியை திருமணம் செய்துகொள்ள விரும்பினார். இதற்காக அவர் முறைப்படி பெண் கேட்டு சென்றுள்ளார்.

பெண் தர மறுப்பு

ஆனால் காளியம்மாள் மற்றும் அவரது மகள் சுபதர்ஷினி இருவருக்கும் இதில் விருப்பமில்லாமல் பெண் கொடுக்க மறுத்துள்ளார். பெண் கொடுக்குமாறு கரேஷ் தனது முதல் மனைவியிடம் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினையால் இரண்டாவது மனைவியான விஜயலட்சுமி கணவரை பிரிந்து வாழத்துவங்கிறார்.

இந்நிலையில் இன்று அதிகாலை சுமார் 3 மணி அளவில் வீட்டின் அடையாளம் தெரியாத இரண்டு நபர்களுடன் சுபதர்ஷினியை கடத்திச் செல்ல நெடுவாசலுக்கு வந்துள்ளார். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த சுபதர்ஷினியின் வாயை துணியால் பொத்தியுள்ளனர். இதில் தூக்கம் கலைத்த அவர் அச்சத்தில் கூச்சல் போட்டுள்ளார்.

தாய் வெட்டிக்கொலை

இதனைப் பார்த்த அவரது தாய் காளியம்மாள் எப்படியாவது மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று போராடியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த விஜின் மற்றும் இரண்டு பேர் சேர்ந்து கும்பல் காளியம்மாளை அரிவாளால் சரமாரியாக வெட்டினர். இதில் தலை மற்றும் கட்டையில் பலவேறு இடங்களில் பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் கீழே கிடக்கு போராடிய காளியம்மாள் ஒருகால் விதாடிகளில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பின்னர் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றனர். இது குறித்து அக்கம்பக்கத்தினர் கொடுத்த தகவலின் பேரில் வடகாடு போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று கொலை யுண்ட காளியம்மாள் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக புதுக் கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் தப்பியோடி கும்பலை போலீசார் வலை வீசி தேடி வருகிறார்கள்.

காஞ்சீபுரம் அருகே

மாணவர்கள் கல்லால் தாக்கி மோதல்

காஞ்சீபுரம், மார்ச்.15– வாலாஜாபாத் ஒன்றியத்திற்குட்பட்ட வளத்துக்காடு ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் தொடக்கப்பள்ளியும் இயங்கி வருகிறது.

இந்த பள்ளியில் பீடி புகைத்ததாக கூறப்படும் 8–ம் வகுப்பு மாணவன் பற்றி ஆசிரியரிடம் கூற 6–ம் வகுப்பு மாணவன் சென்றதாக தெரிகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த 8–ம் வகுப்பு மாணவன் வகுப்பறிற்கு 6–ம் வகுப்பு மாணவனை கல்லால் தாக்கினான். இதில் அவனது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவன் வாலாஜாபாத் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறான்.

மாணவர்களிடையே மோதலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர். மேலும் இந்த பள்ளி வளாகத்தில் உள்ள தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அலுவலில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட தீ விபத்தில் கம்ப்யூட்டர்கள் மற்றும் சில பொருட்கள் சேதமடைந்ததாக கூறப்படுகிறது. இதற்கு மேலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்து உள்ளனர்.

பழைய பிளாஸ்டிக் கழிவு குடோனில்

மர்ம பொருள் வெடித்து பெண் படுகாயம்

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் அருகே உள்ள கணபதி பாளையம் பகுதியில் பழைய பிளாஸ்டிக் கழிவுகள் குடோன் செயல்பட்டு வருகிறது. பல பகுதிகளில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை இங்கு கொண்டு வந்து மறு சூழற்சி செய்யப்படுகிறது.

இந்த பழைய பிளாஸ்டிக் கழிவு குடோனில் நேற்று தொழிலாளி காளியம்மாளி (வயது 60) என்ற பெண் வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது பயங்கர சத்தத்துடன் குடோனில் மர்ம பொருள் வெடித்தது. சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அலறிச்சி ஓடி வந்தனர். மர்ம பொருள் வெடித்ததில் காளியம்மாளின் வலது கை மணிகட்டு பகுதி முழுமையாக சிதைந்து விட்டது. படுகாயம் அடைந்த அவரை மீட்டு பள்ளிபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழகத்தில் உள்ள

66 சுங்க சாவடிகளில் ஏப்ரல் 1-ந் தேதி முதல் கட்டணம் உயர்வு

5 முதல் 7 சதவிதம் வரை அதிகரிக்கும்

சென்னை, மார்ச்.15– தமிழ்நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில சுங்க சாவடிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 1–ந் தேதியும், மீதியுள்ள மற்ற சுங்க சாவடிகளில் செப்டம்பர் 1–ந் தேதியும் கட்டணம் உயர்த்தப்பட்டு வருகிறது. அதன்படி வருகிற ஏப்ரல் 1–ந் தேதி முதல் திண்டிவனம், ஆத்தூர், கணியூர், கப்பலூர், கீழ் குப்பம், திருவண்ணாமலை, மாத்தூர், நாங்குநேரி, ஸ்ரீபெரும்புதூர், பரனூர், திருப்பாச்சேத்தி, வானகரம், விராலிமலை, வாணியம்பாடி உள்பட 66 சுங்க சாவடிகளில் 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்படுகிறது.

இதனால் தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தை விட கார், ஜீப், வேன் போன்ற வாகனங்களுக்கு ரூ.10 முதல் ரூ.40 வரையும், லாரி, பஸ் போன்ற கனரக வாகனங்களுக்கு ரூ.50 முதல் ரூ.200 வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படவாய்ப்புள்ளது. இதே போல் மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.300 முதல் ரூ.750 வரை அதிகரிக்கப்படுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் வருடாந்திர பாஸ்டேக் பாஸ் விலையை ரூ.3 ஆயிரத்தில் இருந்து ரூ.3 ஆயிரத்து 73 ஆக உயர்த்தவும் முடிவு செய்துள்ளனர்.

எதிர்ப்பு

இந்த விலை உயர்வுக்கு பலவேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். ஏற்கனவே பல்வேறு பொருட்களின் விலை அதிகரித்து வரும் நிலையில் தற்போது சுங்க கட்டண உயர்வால் மேலும் கூடுதல் சுமை ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. இது குறித்து மாநில லாரி உரிமையாளர்கள் சங்கமேன தலைவர் தன்ராஜ் கூறியதாவது–

சுங்க சாவடி கட்டண உயர்வால் ஒவ்வொரு லாரிக்கும் தற்போது கூடுதல் செலவு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. நகரத்தையொட்டி உள்ள 13 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு சுங்க சாவடி அமைக்க கூடாது என்ற விதி உள்ளது. அதையும் மீறி சேலம் கருப்பூரில் அமைக்கப்பட்ட டோல்கேட்டை அகற்ற பலவேறு அரசியல் கட்சியினர் மற்றும் லாரி உரிமையாளர்கள் உள்பட பலரும் போராட்டம் நடத்திய நிலையில் அதிகாரிகளும் வந்து பார்வையிட்டு சென்றார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.

காலாவதியான சுங்க சாவடிகள்

மேலும் தமிழகத்தில் காலாவதியான 36 சுங்க சாவடிகளை அகற்றினாலே ஓரளவுக்கு செலவு குறைந்து விடும். அதையும் இதுவரை அகற்றவில்லை. மேலும் சொந்த உபயோகத்துக்கு பயன்படுத்தும் கார்களுக்கு வழங்கப்படுவது போல் லாரிகளுக்கும் வருடாந்திர சுங்க சாவடி பாஸ் வழங்கினால் அதை வாங்க வும் தயாராக உள்ளோம். சுங்க கட்டண உயர்வை உயர்த்தக்கூடாது என்று பலமுறை நாங்கள் வலியுறுத்தியும், தொடர்ந்து கட்டணத்தை உயர்த்தி வருகி றார்கள். இதனால் ஒவ்வொரு லாரிக்கும் கூடுதல் செலவாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சுங்க சாவடி கட்டண உயர்வு காரணமாக தினசரி நெஞ்சாலைகளை பயன்படுத்தும் வாகன ஓட்டிகள், பஸ் மற்றும் சரக்கு வாகன உரிமையாளர்கள் மீது கூடுதல் பொருளாதார சுமை ஏற்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வு காரணமாக பொருட்களின் விலையும் உயரும் நிலை உருவாகி உள்ளது. தற்போது உள்ள சூழ்நிலையில் எரிபொருள் நட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் தற்போது சுங்க கட்டண உயர்வு என்பது அனைத்து தரப்பின ரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

அடையார் ரீஜியனல் லேபர் இன்ஸ்டிட்யூட்டில் எஸ்.எல். ஹாமேக்ஸ் CSR திட்டங்கள் திறப்பு விழா 13-03-2026 அன்று நடைபெற்றது.

மகளை கடத்த முயன்றபோது தடுத்த தாய் வெட்டிக் கொலை

திருமணத்திற்கு பெண் கேட்ட வாலிபர் வெறிச்செயல்

ஆலங்குடி, மார்ச்.15– புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள நெடுவாசல் பகுதியை சேர்ந்தவர் கரேஷ். விவசாயியான இவர், விவசாய கூலிவேலைக்கும் சென்று வந்தார். இவருக்கு திருமணமாகி காளியம்மாள் என்ற மனைவி இருந்தார். இந்த தம்பதிக்கு சுவேதா (வயது 20), சுபதர்ஷினி (18) ஆகிய இரண்டு மகள்களும், பால முருகன் (12) என்ற மகனும் உள்ளனர்.

2–வது திருமணம்

இதற்கிடையே சொந்த ஊரில் விவசாயம் குறைந்ததால் செங்கல்பட்டுக்கு கரேஷ் கூலி வேலைக்கு சென்றார். அங்கு விஜயலட்சுமி என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டு அவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். நெடுவாசல் பகுதியிலேயே வெவ்வேறு வீடுகளில் கரேஷ் காளியம்மாள், விஜயலட்சுமி ஆகியோருடன் குடும்பம் நடத்தி வந்தார்.

இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கரேஷின் இரண்டாவது மனைவியான விஜயலட்சுமியின் தம்பி செங்கல்பட்டை சேர்ந்த விஜின் (34) என்பவர் கரேஷின் முதல் மனைவியான காளியம்மாளின் மகள் சுபதர்ஷினியை திருமணம் செய்துகொள்ள விரும்பினார். இதற்காக அவர் முறைப்படி பெண் கேட்டு சென்றுள்ளார்.

பெண் தர மறுப்பு

ஆனால் காளியம்மாள் மற்றும் அவரது மகள் சுபதர்ஷினி இருவருக்கும் இதில் விருப்பமில்லாமல் பெண் கொடுக்க மறுத்துள்ளார். பெண் கொடுக்குமாறு கரேஷ் தனது முதல் மனைவியிடம் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சினையால் இரண்டாவது மனைவியான விஜயலட்சுமி கணவரை பிரிந்து வாழத்துவங்கிறார்.

இந்நிலையில் இன்று அதிகாலை சுமார் 3 மணி அளவில் வீட்டின் அடையாளம் தெரியாத இரண்டு நபர்களுடன் சுபதர்ஷினியை கடத்திச் செல்ல நெடுவாசலுக்கு வந்துள்ளார். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த சுபதர்ஷினியின் வாயை துணியால் பொத்தியுள்ளனர். இதில் தூக்கம் கலைத்த அவர் அச்சத்தில் கூச்சல் போட்டுள்ளார்.

தாய் வெட்டிக்கொலை

இதனைப் பார்த்த அவரது தாய் காளியம்மாள் எப்படியாவது மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று போராடியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த விஜின் மற்றும் இரண்டு பேர் சேர்ந்து கும்பல் காளியம்மாளை அரிவாளால் சரமாரியாக வெட்டினர். இதில் தலை மற்றும் கட்டையில் பலவேறு இடங்களில் பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் கீழே கிடக்கு போராடிய காளியம்மாள் ஒருகால் விதாடிகளில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பின்னர் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றனர். இது குறித்து அக்கம்பக்கத்தினர் கொடுத்த தகவலின் பேரில் வடகாடு போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று கொலை யுண்ட காளியம்மாள் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக புதுக் கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் தப்பியோடி கும்பலை போலீசார் வலை வீசி தேடி வருகிறார்கள்.

ஜி.கே.வாசனுடன் வக்கீல் ஸ்ரீ.தென்னவன் சந்திப்பு

தூத்துக்குடி மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் எம்.பி.யை ஆழ்வார்திருநகரி தூதுகுடி, தலைவர் அலுவலகத்தில், வக்கீல் மாவட்ட உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ஸ்ரீ.தென்னவன் தேர்தல் மற்றும் சின்னம் நிமித்தமாக சந்தித்தார்.

எஸ்.ஆர்.எம். வள்ளியம்மை பொறியியல் கல்லூரியில் கல்லூரி தின விழா கொண்டாடப்பட்டது. விழாவில் எஸ்.ஆர்.எம். குழுமத்தின் தலைவர் முனைவர் ரவி பச்சமுத்து, எஸ்.ஆர்.எம். வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் துணை தலைவர் ஆர்.பத்மப்பிரியா, நிர்வாக தலைவர் ஆர். ஹரிணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் எம். முருகன், கல்லூரி துணை முதல்வர் வினாலட்சுமி, முனைவர் ஆர்.வெங்கடேஷ் பாபு, முனைவர் பி.சிதம்பரராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

GROUP OF INSTITUTIONS

S. தங்கப்பழம்
கல்விக் குழுமம்
வாசுதேவநல்லூர், தென்காசி - 627760

NO NEET

S. தங்கப்பழம்
மருத்துவக் கல்லூரி
இயற்கை மருத்துவம் & யோக அறிவியல் ஆராய்ச்சி மையம்
BNYS | 5 1/2 years course

S. தங்கப்பழம் வேளாண்மை கல்லூரி
S. தங்கப்பழம் பார்மஸி கல்லூரி
S. தங்கப்பழம் நர்சிங் கல்லூரி
S. தங்கப்பழம் சட்டக் கல்லூரி

ADMISSION CONTACT : 99428 52100